**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C. No. 28/2025**

**Deposition of Witness for Petitioner PW1 (LW1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | அருண் |
| **Father's Name** | : | குமார் |
| **Village** | : | குன்னூர் |
| **Taluk** | : | குன்னூர் |
| **Calling** | : | நகர துணை வட்டாட்சியர் |
| **Age** | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**12.05.2026 Witness Signature :**

**(இந்த சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது. காணொளியின் ஒரு முனையில் நீதிபதியும் மற்றும் போலீசார் மற்றம் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரும் நீதிமன்ற ஊழியர்களும் இருக்கிறார்கள். காணொளியின் மற்றொரு முனையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ள சாட்சியான திரு. அருண் அவர்களும் தயாராக உள்ளார்கள். இரு தரப்பினரின் சம்மதத்தின் பேரில் இச்சாட்சி விசாரணை காணொளி மூலம் பதிவு செய்யப்படுகிறது.)**

**புகார்தாரர் மற்றும் எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை 03.32 P. M**

1. நான் கொடுத்த புகாரில் எந்த இடத்திற்கு சென்றேன் என்றும், சர்வே எண்ணும், எந்த கிராமம் என்றும், செக்குப்பந்தி ஆகியவற்றை சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். குஞ்சப்பனை என்று கூறியுள்ளேன். சம்பவம் நடந்த இடம் பாலமுருகன் பூமி என்று கூறியுள்ளேன் என்றாலும், அவரை சாட்சியாகவோ எதிரியாகவோ இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். புகாரில் பாலமுருகனுக்கு எவ்வளவு சென்ட் பூமி என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் தேயிலைத் தோட்டமா அல்லது கற்பூரத் தோட்டமா என்று சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அசிங்கமாக திட்டியதாக கூறியுள்ளபோதிலும், சம்பவ இடம் பொது இடம் என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டு எதிரிகளும் ஒரே மாதிரியான கெட்ட வார்த்தையால் ஒரே சமயத்தில் திட்டினார்கள் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் கையில் இரும்பு கம்பி இருந்தது என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வேம்புராஜ் என் கையை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய புகாரில் எனக்கு அடிபட்டு இரத்தகாயம் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன் எங்கள் தாசில்தாரிடம் அனுமதி பெற்று செல்லவில்லை என்றால் சரிதான். எதிரி வேம்புராஜ் இரும்பு கம்பியை எந்த இடத்தில் இருந்து எடுத்தார் என்று புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுப்பதற்கு முன் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள் என்றால் தகவல் கொடுத்தவுடன் வந்துவிட்டார்கள். நான் இரும்பு கம்பியை 31.03.2023ம் தேதி 07.00 மணிக்கு அடையாளம் காட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி சம்பவ இடத்தில் மண் எடுத்ததாக கூறியுள்ள போதிலும், அதனை புகைப்படம் எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவ நாளன்று அரசு

பணியில் இருந்ததாகவும், பணியை எதிரிகள் தடுத்ததாக கூறியுள்ள நிலையில், அரசு பணியில் இருந்ததற்கான ஆதாரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவமே நடக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

Sd/- G. Amirdham, 12.05.2026
Judicial Magistrate,
Kotagiri